**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை.**

**முன்னிலை: திருமதி.S.ரேவதி., பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12ம் நாள் புதன்கிழமை**

**O.S. No.54/2012**

1. எம்.செய்யது
2. ராவுத்தர் (இறப்பு)
3. சேக்முகம்மது
4. பரிதா
5. மெஹர்
6. பௌசியா ...வாதிகள்

(Amended As per order in I.A.No.133/2017
Dated 22.11.2017.)

**/எதிர்/**

1. ஷேக்அன்வர்கமால்
2. அப்துல்லத்தீப்
3. தமிழக அரசு அதன் பிரதிநிதியான
   இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மூலம்.
4. மாவட்ட வருவாய் அலுவலர்,
   இராமநாதபுரம்.
5. சாகுல் ஹமீது ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இந்நீதிமன்றம் முன்பு 24.07.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.உதுமான் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து விசாரணையின்போது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 3, 4 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 5ம் பிரதிவாதிக்கு அழைப்பானை சார்பாகாமலும் மேல்நடவடிக்கை எடுக்கப்படாததாலும் 5ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:30:31 +0530

தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்து வாதிகளுக்கும், அவரது சகோதரர் சாகுல்ஹமீதுவிற்கும் பாத்தியம் என விளம்புகை செய்யக்கோரியும், வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:**

**1.1.** தாவாச் சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியமான சொத்தாகும். தாவாச் சொத்து ஆதியில் வாதிகளின் தகப்பனார் முகமது என்ற முகமதுராவுத்தருக்கு தனது தாய்வழி பாத்தியமான சொத்தாகும். முகமது என்ற முகமதுராவுத்தருக்கு வாதிகளை தவிர சாகுல்ஹமீது என்ற வாரிசும் உண்டு. சாகுல்ஹமீது வெளிநாட்டில் இருப்பதால் அவரது சம்மதத்துடன் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்துக்கு அருகில் உள்ள சர்வே எண்.170/11ல் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உண்டு. மேற்படி இடங்கள் நஞ்சை நிலங்கள் ஆகும். 1ம் பிரதிவாதி இவ்வழக்கு 3ம் வாதி மீது தனது சொத்திற்கு செல்லும் வாய்க்காலை தாவா சர்வே எண்.170/10 உடன் சேர்த்து வாய்க்கால் அமைப்பை அழித்து விட்டதாக கூறி 4ம் பிரதிவாதியிடம் ப.மூ.பி8/20521/2012 என்ற எண்ணில் மனுக்கொடுத்து 4ம் பிரதிவாதி சரியாக விசாரணை செய்யாமல் 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவிற்கு மாறாக சர்வே எண்.170/10ல் 24 மீட்டர் நீளம் உள்ள வண்டிப்பாதை செல்வதாகவும், வண்டிப்பாதையில் 1, 2 பிரதிவாதிகள் செல்வதை 3ம் வாதி தடையிடைஞ்சல் செய்யக் கூடாது என்று கு.வி.மு.ச.பிரிவு 145ன் கீழ் 29.06.2012 அன்று உத்தரவிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி சர்வே எண்.170/11ல் உள்ள வாய்க்காலை 3ம் வாதி அகற்றி விட்டதாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனுக்கொடுத்து மேற்படி மனுவே 4ம் பிரதிவாதியிடம் விசாரணைக்காக வந்துள்ளது. 1ம் பிரதிவாதி கொடுத்துள்ள மனுவில் கோரியுள்ள

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12

பரிகாரத்திற்கு மாறாக புதிய வழக்காக தாவா சர்வே எண்.170/10ல் வண்டிப்பாதை செல்வதாகவும், மேற்படி வண்டிப்பாதையில் 1, 2 பிரதிவாதிகள் செல்வதை தடையிடைஞ்சல் செய்யக்கூடாதென்றும் ஆணையிட்டுள்ளது முற்றிலும் தவறானதாகும்.

**1.2.** தாவாச் சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும் எக்காலத்திலும் கிடையாது. தாவாச் சொத்தின் வழியே எவ்வித வண்டிப்பாதையும் செல்லவில்லை. நீண்ட நெடுங்காலமாக வாதிகள் மற்றும் அவர்களுடைய சகோதரர் சாகுல்ஹமீது அனுபவத்தில் விவசாய இடமாகவே தாவாச் சொத்து இருந்து வருகிறது. வாதிகளும் புல எண்.170/11க்கு செல்லும் வாய்க்காலை தாவாச் சொத்துடன் சேர்த்து அழிமானம் செய்யவும் இல்லை. இந்நிலையில் 1, 2 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகளிடம் மனுச்செய்து அவர்களும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக உத்தரவிட்டுள்ளனர். தாவாச் சொத்தில் வாதிகளின் பாத்திய அனுபவத்தை மறுக்க பிரதிவாதிகள் தடைபட்டுள்ளனர். எனவே இவ்வழக்கை அனுமதிக்க வேண்டும்.

2. <u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

**2.1.** வாதிகள் சரியான நான்குமால்கள் சொத்து விபரமும் குறிப்பிடவில்லை. தாவா சொத்து என்பது புஞ்சை நிலம் கிடையாது. தென்வடல் பாதையாக வந்து கிழமேலாக செல்லும் பாதையும், வாய்காலும் ஆகும். அதனை வாதிகள் மறைத்து தனிப்பட்ட சொத்து போல வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக சொத்து கிடையாது. குறிப்பாக வாதிகளின் தகப்பனார் முகம்மது என்ற முகம்மது ராவுத்தரின் தாயாரான வரிசை பாத்துக்கு பாத்தியப்பட்டது இல்லை. முகம்மது என்ற முகம்மது ராவுத்தரின் மனைவி ஹம்சா அம்மாள் என்பவர் உயிரோடு இருக்கிறார். அவருக்கு வாதிகள் மற்றும் 4ம் பிரதிவாதி மற்றும் சபீயா அம்மாள் மற்றும் ஆயிசா மரியம் ஆகியோர்கள் மக்கள். அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. வழக்கானது அவசிய கட்சிக்காரர்களை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 5ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அனாவசிய கட்சிக்காரர் ஆவார். தாவா சொத்திற்கு அருகில் சர்வே எண்.170/11ல் கண்ட நஞ்சை நிலங்கள் 1, 2

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:30:46 +0530

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது. ஏற்கனவே 3ம் வாதி மீது 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்து அந்த மனுவின் பேரில் 4ம் பிரதிவாதி ப.மு.பி.8/20521/2012 என்ற நடவடிக்கையில் தாவா சொத்தை பொறுத்து வாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாதென்றும் பொதுமக்கள் தாவா சொத்தை பாதையாக பயன்படுத்துவதை வாதிகள் தடுக்கக்கூடாதென்றும் உத்தரவு ஏற்பட்டுள்ளது. அந்த விசாரணை உரிய தரப்பினர்களுக்கு போதுமான சந்தர்ப்பம் அளித்து இறுதியில் பிறப்பித்தாகும். அந்த உத்தரவை எதிர்த்து வாதிகள் எந்தவிதமான மேல்முறையீடும் செய்து கொள்ளவில்லை. அதற்கு விரோதமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி தமிழக முதல்வருக்கு கொடுத்த மனுவில் நஞ்சை நிலங்களுக்கு செல்லும் வாய்காலை வாதிகள் அகற்றி விட்டதாகவும், நஞ்சை நிலங்களுக்கு செல்லும் வாய்காலை மீண்டும் வாய்காலாக உருவாக்கி தரவும் வண்டி பாதையை நிலமாக வாதிகள் மாற்றியுள்ளதை வண்டி பாதையாக மாற்றி தரவும் மனுக்கொடுத்திருந்தார். அம்மனுவில் முறையாக விசாரணை நடந்தது. அதில் இறுதியாக பொது மக்கள் பயன்படுத்தும் வண்டி பாதையில் வாதிகள் தடையிடஞ்சல் செய்யக்கூடாதென்று ஆணையிடப்பட்டது. அந்த ஆணையில் கண்ட விபரங்கள் உண்மைதான்.

**2.2.** தாவா சொத்துக்கு வாதிகள் சரியான சர்வே எண்ணும், நான்குமாலும் சொல்லவில்லை. தாவா சொத்தான வண்டிப்பாதைக்கு சர்வே எண்.170/6 ஆகும். அந்த வாய்காலும் அதனோடு தொடர்ச்சியாக உள்ள இடமாகும். ஆனால் வாதிகள் சமூகம் நீதிமன்றத்தை ஏமாற்றி வண்டிப்பாதையும், வாய்காலும் இருப்பதை சொல்லாமல் ஏதோ சர்வே எண்.170/10ல் கண்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் தாவா செய்வதாக கூறி பரிகாரம் கோரியுள்ளது கிடைக்கத்தக்கதில்லை. தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமையில்லை. தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளை நீக்கி அஞ்சுகோட்டை கிராம உள்கடை பொட்டக்கோட்டை என்ற கிராமத்தில் உள்ள அனைவரும் தாவா சொத்தை பாதையாகவும், வாய்காலாகவும் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களை வாதி இவ்வழக்கில் சேர்க்கவில்லை. பிரதிநிதித்துவ அடிப்படையிலும் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை. எனவே இவ்வழக்கானது சட்டபடி நிலைக்கத்தக்கதில்லை. எடுத்த

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12

எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். தாவா சொத்தின் வழியாக வண்டிப்பாதை செல்கிறது என்றும் வாய்கால் செல்கிறது என்றும் வருவாய் ஆவணங்களில் உள்ள புலப்படத்தில் பதிவாகி வருகிறது. அதற்கென உள்ள அ- பதிவேட்டு நகலில் தாவா சொத்து வண்டிப்பாதை, வாய்கால் என வகைபாட்டில் இருக்கிறது. ஸ்தலத்திலும் தாவா சொத்தானது வண்டிப்பாதையாகவும், வாய்காலாகவும் இருந்து வருகிறது. அதனை அனுசரித்தே இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தாவா சொத்தில் வண்டிப்பாதை இருக்கிறதென்றும் அதனை வண்டிப்பாதையாக பொது மக்கள் புழங்குவதை வாதிகளின் வகையறாவினர் தடுக்கக்கூடாதென உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

**2.3.** இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ப.மு.பி.8/20521/2012 நடவடிக்கையில் கடந்த 29.06.2012ம் தேதி தாவா சொத்தானது வண்டிப்பாதை என்று உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அந்த உத்தரவும் இன்று வரை ரத்து செய்யப்படாத நிலையிலும் இவ்வழக்கிலும் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ப.மு.பி.8/20521/2012 நடவடிக்கையில் கடந்த 29.06.2012ம் தேதி பிறப்பித்த உத்தரவு செல்லக்கூடியதில்லை என எவ்வித பரிகாரமும் வாதிகள் கேட்டுக்கொள்ளவில்லை என அந்த வகையில் வாதிகள் வழக்கு நிலைக்கத்தக்கதில்லை. தாவா சொத்தானது வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது ஆகியோர் விவசாயம் நிலம் இல்லை. வாதிகள் வண்டிப்பாதையும், வாய்காலையும் அழிமானம் செய்துள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் தங்களுடைய எந்த நடவடிக்கையிலும் தாவா சொத்தை வாதிகள் சொத்து என்று சொல்லவில்லை. தாவா சொத்தை வாதிகள் நீண்ட நெடுங்காலமாக அனுபவம் செய்யவும் இல்லை. தாவா சொத்தை வாதிகளுக்கு பிரிஸ்கிரிப்டிவ் டைட்டில் சித்திக்கக்கூடியதில்லை. தாவா சொத்து வாதிகள் அனுபவத்திலேயே கிடையாது. வியாஜ்ஜிய மூலம் உண்மையில்லை. வாதிகளே தங்கள் பிராதில் இவ்வழக்கில் கண்ட 4ம் பிரதிவாதி 29.06.2012ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என சொல்லியுள்ளார்கள். ஆனால் அந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை. எனவே இவ்வழக்கிற்கு எவ்வித

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.08.12 17:31:02 +0530

வியாஜ்ஜிய மூலமும் இல்லை. எனவே வாதிகள் வழக்கு நிலைக்கத்தக்கதில்லை. இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவிற்கு விரோதமாக இந்த நீதிமன்றத்தில் வாதிகள் அசல் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்ட வழக்கெழுவினா வனையப்பட்டுள்ளது.

1) தாவா சொத்து வாதிகள் மற்றும் 5ம் பிரதிவாதிக்கு உரிமைபட்டு அவர்கள் அனுபவத்தில் உள்ளதா?

2) தாவா சொத்து பொதுமக்களால் வண்டிப்பாதையாக அனுபவிக்கப்பட்டு வருகிறதா?

3) வாதி கோரியபடி தாவா சொத்தைப் பொறுத்து உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கப்பெறுமா?

4) வாதி பெறத்தக்க இதர பரிகாரம் என்ன?

**4.** வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கு விசாரணையின்போது ஆஜராகாத காரணத்தில் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்கள். 5ம் பிரதிவாதியைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**5. எழுவினா 1 முதல் 4 :**

**5.1.** வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என பரிசீலனை செய்கையில், தாவா சொத்து வாதிகளுக்கும், அவரது சகோதரர் சாகுல்ஹமீதுவிற்கும் பாத்தியம் என விளம்புகை செய்யக்கோரியும், வாதிகளின்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:31:08 +0530

அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் சொல்லியுள்ள அதே சங்கதிகளை தனது முதல் விசாரணையில் எடுத்துரைத்துள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.06.2012ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான செட்டில்மெண்ட் எஸ்.எல்.ஆர். வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான பட்டா வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.06.2012ம் தேதி 4ம் பிரதிவாதி பிறப்பித்த ப.மு.பி.8/20521/12 உத்தரவு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.** வாதிகள் தரப்பு வாதத்தின்போது, தாவா சொத்து வாதிகளின் தகப்பனாரான முகமது (எ) முகமது ராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டது, அவரது தாயார் வருசைபாத்துமாவிடமிருந்து தாவா சொத்து மேற்படி முகமது (எ) முகமது ராவுத்தருக்கு கிடைத்தது, மேற்படி முகமது (எ) முகமது ராவுத்தருக்கு வாதிகள் தவிர சாகுல்ஹமீது என்ற வாரிசும் உள்ளார் எனவும், சாகுல்ஹமீதுக்காகவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, சர்வே எண்.170/11ல் உள்ள வாய்காலை வாதிகள் அழித்ததாக 1ம் பிரதிவாதி மனு கொடுத்ததார், ஆனால் மனுவின் பேரில் விசாரணை நடத்திய 4ம் பிரதிவாதி சர்வே எண்.170/10ல் 24 மீட்டர் கொண்ட வண்டி பாதை இருப்பதாகவும், அதில் 1, 2 பிரதிவாதிகள் செல்வதை 3ம் வாதி தடை செய்யக்கூடாது எனவும் 29.06.2012ம் தேதி உத்தரவிட்டார், சர்வே எண்.170/11 குறித்து விசாரணை நடத்த வேண்டிய 4ம் பிரதிவாதி சர்வே எண்.170/10ல் வண்டி பாதையை இருப்பதாகவும், அதனை தடையிடைஞ்சல் செய்யக்கூடாது என உத்தரவு பிறப்பித்தது சட்டமுரணானது, வாதிகள் சர்வே எண்.170/11ல் உள்ள வாய்காலை அழிக்கவில்லை, தாவா சொத்தின் வழியே எந்த வண்டிப்பாதையும் செல்லவில்லை, எனவே தாவா சொத்து வாதிகளுக்கும், அவரது சகோதரரான சாகுல்ஹமீதுவிற்கும் பாத்தியம் என விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கு தாக்கல்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:31:16 +0530

செய்யப்பட்டுள்ளது, எனவே இவ்வழக்கை அனுமதிக்க வேண்டியது அவசியம் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

**5.3.** இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். ஆனால் சாட்சியம் முன்னிறுத்த வராததால் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிற்பிக்கப்பட்டுள்ளது, வழக்குரை மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை கருத்தில் கொள்ளும்போது தாவா சொத்தான சர்வே எண்.170/10 குறித்து 4ம் பிரதிவாதியான மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதை இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. ஆனால் வாதி தரப்பில் சர்வே எண்.170/10 குறித்து 1ம் பிரதிவாதி எந்த புகாரும் செய்யவில்லை எனவும், சர்வே எண்.170/11ல் உள்ள வாய்காலை வாதிகள் அடைத்துள்ளனர் என புகார் கொடுத்துள்ளார் எனவும், ஆனால் உண்மைக்கு புறம்பாக சர்வே எண்.170/10ல் வண்டிப்பாதை உள்ளதாகவும், அதை 1, 2 பிரதிவாதிகளும், பொதுமக்களும் அனுபவிப்பதை வாதிகள் தடை செய்யக்கூடாது என உத்தரவிட்டது தவறு என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து வருவாய்துறை விசாரணை நடத்தப்பட்டதாகவும், 1ம் பிரதிவாதி நஞ்சை நிலங்களுக்கு செல்லும் வாய்க்காலை வாதிகள் அகற்றி விட்டதாகவும், வாய்காலை மீண்டும் வாய்க்காலாக உருவாக்கி தரவும், வண்டி பாதையை மீண்டும் வண்டி பாதையாக மாற்றி தரவும் மனு கொடுத்திருந்தார் எனவும், தாவா சொத்தின் வழியாக வண்டி பாதை மற்றும் வாய்கால் செல்வதாக வருவாய்துறை ஆவணங்களில் உள்ளதாகவும், புலப்படத்திலும், அ-பதிவேட்டிலும் வண்டி பாதை மற்றும் வாய்கால் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

**5.4.** இந்நிலையில் வாதிகள் தாவா சொத்தான சர்வே எண்.170/10 என்ன வகைப்பட்டில் உள்ளது என்பதையும், தாவா சொத்தின் அமைப்பு மற்றும் தன்மை என்ன என்பதையும் எடுத்துரைத்து தாவா சொத்து எந்த வகையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டியது வாதிகளின் கடமையாகும். ஆனால்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:31:46 +0530

இவ்வழக்கில் வாதிகள் தாவா சொத்து வாதிகளின் தகப்பனாரின் தாயாரான வருசைபாத்துமாவிற்கு பாத்தியப்பட்டது எனவும், அவரிடமிருந்து வாரிசு அடிப்படையில் வாதிகளின் தகப்பனாரான முகமது (எ) முகமது ராவுத்தருக்கு கிடைத்தது எனவும், மேற்படி முகமது (எ) முகமது ராவுத்தருக்கு வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது வாரிசுகள் எனவும், தாவா சொத்து வாதிகள் மற்றும் சாகுல்ஹமீதுவிற்கு பாத்தியப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த வகையில் வருசைபாத்துவிற்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிவிக்கவில்லை. மேலும், வருசைபாத்துவிற்கு வாதிகளின் தகப்பனார் தவிர வேறு வாரிசுகள் உள்ளார்களா என்பதை தெரிவிக்கவும் இல்லை. வருசைபாத்துவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், வாதிகளின் தகப்பனாரான முகமது (எ) முகமது ராவுத்தர் வருசைபாத்துவின் வாரிசா என்பதையும், வருசைபாத்துவிற்கு வேறு வாரிசுகள் இருக்கிறார்களா என்பதையும் தெரிந்துகொள்ள இயலவில்லை. மேலும் தாவா சொத்து வருசைபாத்துவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய எந்த சாட்சிய, சான்றாவணங்களையும் வாதிகள் முன்னிறுத்தவில்லை. இந்நிலையில் வாதிகள் தாவா சொத்து வருசைபாத்துவிற்கு பாத்தியப்பட்டது என்பதையே நிரூபிக்கத்தவறி விட்டார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.5.** அதேபோல், முகமது (எ) முகமது ராவுத்தர் காலமாகி விட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முகமது (எ) முகமது ராவுத்தர் எந்த தேதியில் காலமானார் என்று தெரிவிக்கவில்லை. மேலும் முகமது (எ) முகமது ராவுத்தரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், முகமது (எ) முகமது ராவுத்தர் காலமாகி விட்டாரா? எந்த தேதியில் காலமானார்? ஆகிய சங்கதிகளையும், வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது ஆகியோர் முகமது (எ) முகமது ராவுத்தரின் வாரிசுகளா என்பதையும் தெரிந்து கொள்ள இயலவில்லை. மேலும் முகமது (எ) முகமது ராவுத்தருக்கு வேறு வாரிசுகள் இருக்கிறார்களா என்பதையும் தெரிந்து கொள்ள இயலவில்லை. மேலும் யார் யார் வாரிசுகள் என்பதை தெரிந்து கொள்ளும்விதமாக இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:31:53 +0530

செய்யவேண்டும். இவ்வழக்கில் முகமது (எ) முகமது ராவுத்தருக்கு தாவா சொத்து எந்த அடிப்படையில் வருசைபாத்துவிடமிருந்து கிடைத்தது என்பதை தெரிவிக்கவில்லை. முதலில் முகமது (எ) முகமது ராவுத்தர் இறந்து விட்டார் என்பதை நிரூபிக்கவேண்டும். முகமது (எ) முகமது ராவுத்தருக்கு வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது ஆகியோர் வாரிசுகள் என்பதை நிரூபிக்க வேண்டும். இந்த அடிப்படை சங்கதிகளை நிரூபித்தால் மட்டுமே வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா என்பதை முடிவு செய்ய இயலும். மேலும் இவ்வழக்கில் முகமது ராவுத்தர் என்பவர் பெயரில் உள்ள செட்டில்மென்ட் நிலப்பதிவேடு நகல் மற்றும் பட்டா ஆகியவை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் துறை ஆவணங்கள் உரிமையை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் இல்லை என பல முன்தீர்ப்புகள் உள்ளது. இந்நிலையில், தாவா சொத்து முகமது (எ) முகமது ராவுத்தருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்கக்கூடிய எந்த சாட்சிய, சான்றாவணங்களையும் வாதிகள் முன்னிறுத்தவில்லை. எனவே வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது ஆகியோர் முகமது (எ) முகமது ராவுத்தரின் வாரிசுகள் என்பதையும், தாவா சொத்து முகமது (எ) முகமது ராவுத்தருக்கு பாத்தியப்பட்டது என்பதையும் நிரூபிக்க வாதிகள் தவறி விட்டார்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.6.** அடுத்ததாக, சாகுல்ஹமீது தாவா சொத்தின் உரிமையாளர் என தெரிவித்து அவரை இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்த்து தாவா சொத்து வாதிகளுக்கும், 5ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் என விளம்புகை செய்ய பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதிக்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என 5ம் பிரதிவாதிக்கு எதிராக 18.04.2016ம் தேதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் அவசிய தரப்பினரான 5ம் பிரதிவாதிக்கு உரிய நடவடிக்கை எடுக்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது வாதிகளின் வழக்கை பாதிக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. சாகுல்ஹமீது இவ்வழக்கில் பெயரளவில் சேர்த்திருந்தாலும், அவருக்கு உரிய நடவடிக்கை எடுக்காதது தவறானது ஆகும். உரிமையாளர் என தெரிவிக்கப்பட்டும் சாகுல்ஹமீது தனது தரப்பு என்ன என்பதை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டியது அவசியம் ஆகும். எனவே அவர்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:31:58 +0530

நீதிமன்றத்தில் ஆஜராக தேவையான நடவடிக்கைகளை எடுத்து வழக்கை நடத்தி இருக்க வேண்டியது அவசியம் ஆகும். ஆனால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காதது வாதிகளின் வழக்கை பாதித்துள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.7.** இவ்வழக்கில் ஆரம்பத்தில் செய்யது, ராவுத்தர் மற்றும் ஷேக்முகமது ஆகியோர் வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். முகமது (எ) முகமது ராவுத்தருக்கு வாதிகள் மற்றும் சாகுல்ஹமீது வாரிசுகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதியான ராவுத்தர் காலமாகி 4 முதல் 6 வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் 4 முதல் 6 வாதிகள் எந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து வழக்குரையை திருத்தம் செய்யவும், வாதிகள் முகமது (எ) முகமது ராவுத்தரின் வாரிசுகள் என்ற வரியை திருத்தம் செய்யவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில், வழக்குரையை படிக்கும்போது ராவுத்தரின் வாரிசுகள் என வாதிகளால் சேர்க்கப்பட்டுள்ள 4 முதல் 6 வாதிகள் முகமது (எ) முகமது ராவுத்தரின் வாரிசு என்பதுபோல் தோற்றம் ஏற்படுகிறது. இது இவ்வழக்கில் குழப்பதை ஏற்படுத்துகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.8.** சர்வே எண்.170/10 வண்டிப் பாதை செல்லவில்லை என தெரிவிக்கும் வாதி சொத்தின் தன்மையை தெளிவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சொத்தின் அம்சத்தை தெளிவுபடுத்த அ-பதிவேடு, புல வரைபடம் உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் சொத்தின் அமைப்பு மற்றும் தன்மையை வாதிகள் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த தவறிவிட்டனர் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சொத்தின் அமைப்பை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் வண்ணம் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து சொத்தினை பார்வையிட வாதிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்தில் வண்டிப்பாதை செல்கிறது என அரசு ஆவணமான வா.சா.ஆ.3 உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிலையில், அவ்வாறு வண்டி பாதை அமையவில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை வாதிக்கே உள்ளது. ஆனால் அவ்வாறு தாவா சொத்தில் வண்டிப்பாதை அமையவில்லை என்பதை தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:32:06 +0530

நிரூபிக்க வாதிகள் தவறிவிட்டனர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.9.** மேலும் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் முகமது (எ) முகமது ராவுத்தரின் மனைவியான ஹம்சா அம்மாள் உயிருடன் இருப்பதாகவும், அவருக்கு சபீயா அம்மாள் மற்றும் ஆயிசா மரியம் ஆகிய வாரிசுகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதுசம்மந்தமாக வாதிகள் தரப்பில் எந்த மறுப்பும் தெரிவிக்கவும் இல்லை, மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவும் இல்லை. இந்நிலையில் மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலே விவாதித்தபடி வாதிகள் தங்களது வழக்கினை நிரூபிக்கவில்லை என்பதாலும், ஏற்கனவே 5ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது வாதிகளின் வழக்கை பாதிக்கும் என்பதாலும், அவசிய தரப்பினரை சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாலும், வாதிகள் கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6. முடிவாக இவ்வழக்கானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் நேரடியாக பிழை திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:32:12 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

<u>**வாதிகள் தரப்பு சாட்சி:**</u>

| வ.எண். | சாட்சி | தேதி | சாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | வா.சா.1 | 01.09.2023 | செய்யது |

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.08.12 17:32:17 +0530

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| வ. எண். | ஆவணங்கள் | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்களின் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 28.06.2012 | தாவா சொத்திற்கான செட்டில்மெண்ட் எஸ்.எல்.ஆர் | சான்றிட்ட நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | 03.07.2012 | தாவா சொத்திற்கான பட்டா | அசல் |
| 3. | வா.சா.ஆ.3 | 29.06.2012 | 4ம் பிரதிவாதி ப.மு.பி.8/20521/12 வழங்கிய உத்தரவு | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:** **இல்லை.**

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :** **இல்லை.**

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.08.12 17:32:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருவாடானை.
O.S.No.54/2012
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள்: 12.08.2026.